இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் (இயற்கை விஞ்ஞானம்) - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

**STU5314– கல்வி வழிகாட்டலும் ஆலோசனை சேவையும்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 22.11.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி **I** இல் எல்லா வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்

## பகுதி – I

1. பாடசாலை முறைமைக்கு வெளியே தற்போது இயங்குகின்ற வழிகாட்டல் ஆலோசனை சேவையொன்றினை பெயரிட்டு அச்சேவையில் ஏதாவது விஷேட ஆலோசனை பகுதியொன்றினை அடையாளப்படுத்தவதன் மூலம் அதனது சேவைகளை விளக்குக.

2. இரண்டாம் நிலை மாணவர்கள் தாம் விரும்பும் தொழில்களை பற்றி தகவல்களை திரட்டி கொள்வதற்கு அவர்கள் மத்தியில் வளர்த்துக் கொள்ள வேண்டிய இரண்டு (02) திறன்களை சுருக்கமாக விளக்குக.

3. பாடசாலை மாணவர்களிடையே கோபம் ஏற்படுவதற்கான இரண்டு (02) காரணிகளை சுருக்கமாக பரீட்சிக்குக.

4. பார்வை கோளாறுடைய மாணவர்களின் அவதானிக்கக்கூடிய நடத்தைகள் மூன்றினை (03) அடையாளப்படுத்துவதன் மூலம், எவ்வாறு ஒரு ஆசிரியர் வகுப்பறையில் அவ்வகையான பிள்ளைகளை அடையாளம் காணலாம் என்பதை கலந்துரையாடுக.

5. கட்டிளமையினரிடையே சமநிலை மிக்க ஆளுமையொன்றினை கட்டியெழுப்புவதற்கு உதவுவதற்காக எவ்வாறு பாடசாலை ஆலோசனை சேவையினால் முடியும் என்பதனை இரண்டு (02) பொருத்தமான உதாரணங்கள் குறிப்பிடுவதன் மூலம் விளக்குக.

6. கற்றல் கற்பித்தல் செயன்முறையில் கற்றல் இயலாமையுடைய பிள்ளைகளின் பங்கு பற்றலை இலகுபடுத்தும் வகையில் ஆசிரியர் ஒருவரால் கையாளக் கூடிய ஐந்து (05) உபாயங்களை குறிப்பிடுக.

7. தொழில் வழிகாட்டல் சேவையினை மேற்கொள்ள 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பங்களில் பிராங்க் பார்ஸனினால் அறிமுகப்படுத்தப்பட்ட கருவியான, பார்ஸனின் மாதிரியை பகுப்பாய்வு செய்க.

8. ஆன்ரோவின் தொழில் வழிகாட்டல் கோட்பாட்டுடன் இணைந்த வகையில் சிரேஷ்ட இடைநிலை பாடசாலைகளில் மாணவர்களிற்கு வழங்கக்கூடிய தொழில் வழிகாட்டலின் பாடசாலை ஆலோசனை வழிகாட்டலினால் மேற்கொள்ள முடியுமான இரண்டு (02) உபாயங்களை விளக்குக.

**(5 x 8 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9.

**i.** பிள்ளைகளின் பொருத்தப்பாட்டிற்கு தடையாக இருக்கக்கூடிய நான்கு (04) காரணிகளை குறிப்பிடுக.

**(1x4=04 புள்ளிகள்)**

**ii.** "பாடசாலையில் பொருத்தப்பாடுகளில் உள்ள தோல்வியானது கல்வி பிரச்சினைகளுக்கு இட்டுச் செல்லும்" இரண்டு (02) பொருத்தமான உதாரணங்களை முன்வைப்பதன் மூலம் மேற்கூறிய கூற்றை நியாயப்படுத்துக.

**(06 புள்ளிகள்)**

**iii.** உங்களது பாடசாலையில் ஆலோசனை சேவை பிரிவின் தலைமை அதிகாரி நீங்கள் என கற்பனை கொள்க. குறிப்பிட்ட பொருத்தப்பாடுடைய பிரச்சினையுள்ள ஒரு மாணவர் உங்களது உதவியை வேண்டி நிற்கின்றார். இம்மாணவருக்கு ஆலோசனையை வழங்கும் போது சுயசரிதையை (Autobiographies) ஒரு நுட்பமாக பயன்படுத்துவதன் பிரயோசனத்தை மதிப்பீடு செய்க. **(10 புள்ளிகள்)**

10.

**i.** குடும்ப அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் எவ்வகையான தேவைகளை இலங்கை பாடசாலை அமைப்பிலிருந்து எதிர்பார்க்கின்றது என்பதை சுருக்கமாக விளக்குக. **(04 புள்ளிகள்)**

**ii.** இரண்டு (02) உதாரணங்கள் குறிப்பிடுவதன் மூலம் ஆரம்ப வகுப்பு மாணவர்களினால் எதிர்கொள்ளக்கூடிய ஒழுங்கின்மைகள் எவ்வாறு பாடசாலை ஆலோசனை சேவையை வேண்டி நிற்கின்றது என்பதை பகுப்பாய்வு செய்க. **(06 புள்ளிகள்)**

**iii. A.** கட்டிளமையினர் எதிர்பாலருடன் தொடர்புகளை மேற்கொள்ளும் போதும் தொடர்புகளை கட்டியெழுப்பும் போதும் ஏதிர்கொள்ளக் கூடிய இரண்டு (02) பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

**(1x2=02 புள்ளிகள்)**

**B.** மேலே A யில் நீங்கள் குறிப்பிட்ட பிரச்சினைகளில் ஒன்றினை தடுப்பதற்காக கட்டிளமையினருக்கு உதவும் வகையில் பாடசாலை ஆலோசனை சேவையினால் எவ்வாறு முடியுமாகின்றது என்பதை பரீட்சிக்குக. ஆலோசனை சேவையினால் நடைமுறைப்படுத்த முடியுமான விஷேட செயற்பாடுகளினால் பரீட்சிக்குக.

**(08 புள்ளிகள்)**

11.

**i.** பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையொன்றினை நிறுவுவதற்கும் அதனை பராமரிப்பதற்கும் முடியுமாகின்ற இரண்டு (02) வழிகாட்டுதல்களை சுருக்கமாக விளக்குக. **(04 புள்ளிகள்)**

**ii.** "மாணவரின் விருத்தியில் உதவி செய்யக்கூடிய பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையை உள்ளடக்கிய அடிப்படை செயன்முறையானது ஒரு வேலைவாய்ப்பிற்கான செயன்முறையாகும்" பாடசாலையிலும், பாடசாலைக்கு வெளியேயுமாக வேலைவாய்ப்பினை கருத்திற்கொண்டு மேற்கூறிய கூற்றினை நியாயப்படுத்துக. **(06 புள்ளிகள்)**

**iii.** உங்களது பாடசாலையில் நீங்கள் ஒரு வழிகாட்டல் ஆலோசனை சேவையொன்றினை ஆரம்பிப்பதாக கற்பனை செய்க. உமது பாடசாலை சூழ்நிலைக்கு ஏற்றவகையில் ஆலோசனை சேவையினை நடைமுறைப்படுத்துவதற்கு ஒன்றிணைந்த மாதிரியினை ஒழுங்கமைப்பு மாதிரியாக நடைமுறைப்படுத்துவதன் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுக. **(10 புள்ளிகள்)**

12.

**i.** பாடசாலை மாணவர்களிற்கு ஆலோசனையை வழங்கும் போது ஆலோசனை நுட்பங்களை பயன்படுத்துவதன் நன்மைகள் நான்கினை (04) குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

**ii.** அதிவேக (Hyperactive) நடத்தையுள்ள ஒரு மாணவனை பற்றிய ஆழமான ஆய்வொன்றினை மேற்கொள்ளும் போது எவ்வாறு விடய ஆய்வு நுட்பத்தினை பயன்படுத்தலாம் என்பதை இரண்டு (02) ஆலோசனை நுட்பங்களை குறிப்பிடுவதன் மூலம் விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** அதிவேக (Hyperactive) நடத்தை பிரச்சினையுடைய பிள்ளை தொடர்பாக விடய ஆய்வொன்றினை நடத்திய பின்னர் அப்பிள்ளையின் முழு விருத்திக்காக எவ்வாறு உதவலாம் என்பதனை மூன்று (03) உபாயங்களை குறிப்பிடுவதன் மூலம் விளக்குக. **(08 புள்ளிகள்)**

13.

**i.** ஆலோசனை வழிகாட்டலில் உளப்பகுப்பாய்வு அணுகுமுறையின் அடிப்படை தத்துவத்தினை விளக்குக.

**(04** புள்ளிகள்)

**ii.** பிரய்டின் உளப்பகுப்பாய்வு சிகிச்சை முறையின் இரண்டு (02) பிரதான இலக்குகளை விளக்குக.

**(3x2=06** புள்ளிகள்)

**iii.** "ஆலோசனை வழிகாட்டலில் உளப்பகுப்பாய்வு அணுகுமுறை மிகப் பழைய அணுகுமுறையாகும்" நவீன உலகில் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உதவதில் உளப்பகுப்பாய்வு அணுகுமுறையில் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுக.

**(10** புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -